பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 14உ (28—6—67) புதன் ★ வெளியூர்: ஆனி 15உ (29—6—67) வியாழன் [இதழ்: 12

அறிவிப்பு

சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்துக்குப் பதிலளித்து, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை முழுவதும், 'நம் நாடு' இதழில் தொடர்ந்து வெளியிடப்படும்.

இருபது மாதத் தவணை தாருங்கள்

சூலை 23

சேலம்-தூத்துக்குடி நாள்

தி.மு. கழகத்தின் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்ற அனைத்துக் கட்சியினரும் கலந்துகொள்ளும்வகையில் நாடெங்கும் நடைபெறும் சேலம்—தூத்துக்குடி எழுச்சி நாள் பொதுக்கூட்டங்களில், கீழ்க்கண்ட இடங்களில் கழகச் சார்பில் கலந்துகொள்வோர் விவரம் தரப்பட்டுள்ளது.

விடப்பட்டுள்ள ஊர்களில் கலந்துகொள்ளும் கழகச் சொற்பொழிவாளர்களின் பெயர்களும் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டால், அவையும் தொடர்ந்து வெளியிடப்படும்.

அறிஞர் அண்ணா	...	காரைக்குடி
இரா. நெடுஞ்செழியன்	...	சேலம்
மு. கருணாநிதி	...	சென்னை
கே. ஏ. மதியழகன்	...	தஞ்சை
என். வி. நடராசன் எம்.எல்.சி.	...	காஞ்சிபுரம்
சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.	...	திண்டிவனம்
சத்தியவாணிமுத்து	...	திருச்சி
ஏ. கோவிந்தசாமி	...	கோவை
செ. மாதவன்	...	தூத்துக்குடி
சாதிக் பாட்சா	...	வேலூர்
எம். முத்துசாமி	...	மதுரை
ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.	...	கடலூர்
ப. உ. சண்முகம்	...	ஆரணி
காஞ்சி கல்யாணசுந்தரம்	...	ஈரோடு
அரங்கண்ணல் எம்.எல்.ஏ.	...	குளித்தலை
சிட்டிபாபு எம்.பி.	...	திண்டுக்கல்
ஓ. பி. இராமன் எம்.எல்.ஏ.	...	அரக்கோணம்
ஆலடி அருணா எம்.எல்.ஏ.	...	ஆத்தூர் (சேலம்)
பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ.	...	திருவண்ணாமலை
சா.பெ. மலைச்சாமி எம்.எல்.ஏ.	...	கள்ளக்குறிச்சி
கோ. விசுவநாதம் எம்.பி.	...	புதுக்கோட்டை
எல். கணேசன் எம்.எல்.ஏ.	...	குடந்தை
தில்லைவில்லாளன் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.	...	திருவாரூர்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சட்டமியற்றியும் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படாததேன்?

முன்னாள் அரசுக்கு நேரு எழுதிய கடிதம்தான் காரணமா?

சட்டமன்றக் கேள்விக்கு அண்ணா தந்த பதில்

சென்னை, சூன் 27—

குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் வகையில் 1949-ம் ஆண்டு தமிழக அரசு நிறைவேற்றியுள்ள சட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்துவருவதாகவும், 1968 ஏப்ரல் வரை இச்சட்டத்தை செயல்படுத்தவேண்டாம் என முந்திய காங்கிரசு ஆட்சி முடிவு செய்திருந்ததாகவும், இக்கெடு முடிந்ததும், அதனைச் செயல்படுத்துவது குறித்து தற்போதைய அரசு முடிவு செய்யும் என்றும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

எச். வி. ஹாண்டே:—"இங்கே நாம் குதிரைப் பந்தயத்தை ஒழித்தால், வேற்று மாநிலங்களில் உள்ள ஐதராபாத், பெங்களூர் போன்ற இடங்களுக்குச் சென்று குதிரைப் பந்தயச் சூதாட்டத்தில் இந்த மாநிலத்தவர் கலந்துகொள்ளக்கூடும்; எனவே, குதிரைப் பந்தய ஒழிப்புத் தொடர்பாக அனைத்திந்திய அடிப்படையில் ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அண்ணா:—"வெளி இடங்களுக்குச் செல்வதைத் தடுக்க நான் விரும்பவில்லை; யார் எங்கே வேண்டுமானாலும் போகட்டும்; வசதி படைத்தவர்கள், உல்லாச வாழ்க்கை அனுபவிக்க அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குக்கூடச் செல்லக்கூடும்; அதையெல்லாம் நாம் தடுக்க முடியாது. நமது மாநிலத்தில் உள்ள ஏழை மக்களைப் பாதிக்கும் இந்தச் சூதாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள்."

எம். எஸ். சிவசாமி:—"குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டாம் என்று மத்திய அரசு முன்னைய மாநில அரசுக்கு அறிவித்திருந்ததா?"

அண்ணா:—"மத்திய அரசு அறிவிக்கவில்லை; காலஞ்சென்ற ஜவகர்லால் நேரு கடிதம் எழுதியிருந்தார்."

சீமைச்சாமி:—"குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது என்பது, லைசென்சை நிறுத்திவிடுவதா? அல்லது வேறு எந்த வழியில்?"

அண்ணா:—"பொதுவாக இப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகளை முன்கூட்டி அறிவிப்பது நல்லதல்ல. 1968 வரை கால வரை இருக்கிறது; அதன் பிறகு, எப்படி—என்ன முறைகளைக் கையாளலாம் என்று யோசித்து முடிவு செய்யப்படும்."

இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைத்துக் காட்டுகிறோம்

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா அறைகூவல்

சென்னை, சூன் 28—

"20 மாத காலம் கெடு தாருகங்ள்—இன்றியமையாத பொருட்களின் விலைகளையெல்லாம் நாங்கள் குறைத்துக் காட்டுகிறோம்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூறினார்கள்.

சேத்துப்பட்டு அம்பேத்கார் திடலில் நடந்த கழகப்பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டார்கள்.

ஏ.வி.பி. ஆசைத்தம்பி

எழும்பூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி.மு. கழகம் ஆட்சிப்பொறுப்பேற்றவுடனேயே ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டது குறிப்பிடத்தகுந்த மாபெரும் சாதனையாகும்."

அண்ணா

அறிஞர் அண்ணா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"20 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்ட காங்கிரசுக்காரர்கள், கழகத்தின் ஆட்சிக்கு ஆதரவு காட்டி ஒத்துழைப்புக் கொடுக்கட்டும்; அல்லது இருபது மாதங்களாவது தொல்லை கொடுக்காமல் — திட்டங்களை நிறைவேற்றுகையில் தடங்கலாக - முட்டுக்கட்டையாக இல்லாமல் இருக்கட்டும்!

இருபது மாதங்களுக்குப் பிறகு, தி. மு. கழக அரசு செய்து முடித்த காரியங்களை—நிறைவேற்றிய திட்டங்களைக் கணக்கிட்டுப் பார்த்து காங்கிரசுக்காரர்களே முடிவு சொல்லட்டும்—தீர்ப்பளிக்கட்டும்.

அதிக விலையில் விற்றுக்கொண்டிருந்த அரிசியைக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்யத் தமிழக அரசால் முடிந்தது. ஓரளவு போதுமான நெல் தமிழகத்திலேயே விளைகின்ற காரணத்தால், அரிசி விலை ஏறாமல் இருக்க அரசே கொள்முதல் செய்து—இழப்பைக்கூட அரசே ஏற்றுக்கொண்டு—குறைந்த விலைக்கு அரிசி வழங்கப்படுகிறது.

ஆனால், பருப்பு போன்ற பொருட்கள் போதுமான அளவுக்குத் தமிழகத்திலே விளைவதில்லை என்பதாலும், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களிலிருந்து பருப்புகள் வாங்க வேண்டியதிருப்பதாலும்தான் தமிழக அரசினால் உடனடியாக அவற்றின் விலையைக் குறைக்க முடியவில்லை என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பருப்பு அதிகமாக விளைகின்ற மற்ற மாநிலங்கள், பற்றாக் குறையான மாநிலங்களுக்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்கு மத்திய அரசுதான் வழிவகுக்க வேண்டும்.

தமிழகத்திற்குப் போதுமான அளவு பருப்புக் கிடைப்பதற்கும் அதன் விலையைக் குறைப்பதற்கும் மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

எழுச்சி நாள்—அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை, சூன் 27—

"சேலம்—தூத்துக்குடி நாளை, 'ஏதோ ஆர்ப்பாட்ட நாள் என்று நினைத்துக்கொண்டு சில காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்கள்! அந்த நாளில் எந்தவிதமான கடையடைப்போ, மறியலோ கிடையாது! மக்களைக் கூட்டி விவரங்களை எடுத்துச் சொல்வோம்—அவ்வளவுதான்!

"மக்களுக்குக்கூட மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரே கருத்துத்தான் இருக்கிறது என்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் கூறுகின்றன!

சட்டமன்றத்தில் தி. மு. கழகத்திற்கு 138 இடங்கள் கிடைத்தன என்றாலும், நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில்—நிறுத்திவைக்கப்பட்ட 25 உறுப்பினர்களும் வெற்றி பெற்றார்கள்! காரணம் என்ன? 'மத்திய அரசிடம் போராடிப் பெறுபவர்கள் தி. மு. கழகத்தினர்; அவர்கள் அதிகமாகப் போவது நல்லது' என்று மக்கள் நினைத்தார்கள்—ஓட்டளித்தார்கள்!

"'மத்திய அரசின் செயல்களைச் சந்தைச் சதுக்கத்திற்கு எடுத்துச் செல்வேன்' என்து நான் கூறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிலர், 'சந்தைச் சதுக்கம்' எனக் கூறக் கூடாது' என்று கூறினர்.

சந்தைச் சதுக்கத்தில்தான் நமது கொள்கைகள்—செயல்கள் விவாதிக்கப்படுகின்றன; அங்குதான் முடிவும் எடுக்கப்படுகின்றன! சந்தைச் சதுக்கம் என்பது, 'மக்கள்—மனித உணர்வுகளின் கூட்டம்' என்ற கருத்தில்தான் பேசினேன். ஆகவே, மக்களுக்கு விஷயத்தைச் சொல்லி—அவர்களின் ஆதரவைப் பெற நிச்சயம் சேலம்—தூத்துக்குடி நாளைக் கொண்டாடத்தான் போகிறோம்; அதில் பின்வாங்குதல் இல்லை!"

—சட்டமன்ற மேலவையில்

சேலம்—தூத்துக்குடிப் பிரச்சினை வளர இடமளிக்காதீர்!

டில்லி ஏகாதிபத்தியத்துக்கு ம. பொ. சிவஞானம் எச்சரிக்கை

சென்னை, சூன் 26—

"கத்தியிலே கொழுப்புத் தடவச் சொன்னது சாதாரண விவகாரம்தான்; இருந்தாலும், அது பெரிய சிப்பாய்க் கலகத்தையே ஏற்படுத்தியது.

"சேலம் இரும்பாலை—தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம், தமிழர்களின் தன்னுரிமையைக் காக்கும் சிக்கல்கள் ஆகும்; ஆகவே, இந்தக் கிளர்ச்சி எப்படி வடிவம் எடுக்குமோ சொல்லமுடியாது!"

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், சென்னையில் நடைபெற்ற அவர்தம் 62-ம் ஆண்டுப் பிறந்த நாள் விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறியதாவது :—

"கொழுப்புத் தடவும் விவகாரம் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆணி வேரையே ஆட்டிக் காட்டியது!

சேலம் இரும்பு—தூத்துக்குடித் திட்டம் தொடர்பான கிளர்ச்சி டில்லி ஏகாதிபத்தியத்தைத் தகர்த்தெறியப் போகிறது! அந்த நிலைக்கு மத்திய அரசினர், பிரச்சினையை வளரச் செய்ய விடுவது அறிவுடைமையாகாது—அரசியல் இராசதந்திரமும் ஆகாது!

ஆகவே, சேலம், தூத்துக்குடித் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசினர் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதே முறையானவையாகும்."

நோய் குணமாகட்டும்!

"நலிந்தவர்களைத் தேற்றுகிற நேர்த்தியான தொண்டினை நீங்கள் செய்கிறீர்கள். இளம் வயதிலேயே இதில் ஈடுபட்டு, நோயாளிகளுக்காகப் பாடுபடுகிறீர்கள்; தொண்டாற்றுகிறீர்கள். அன்பையும் அறிவையும் சமநிலையாக்கி நோய்களைத் தீர்த்துவைக்கிறீர்கள்!

"ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். உங்களுக்கு இவ்வளவு குறைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதை அறிந்து வருந்துகிறேன். அதே நேரத்தில், உங்களுககு ஒன்று தெரிவித்துக்கொள்ளுவேன்; நோயாளி ஒருவன், 'ஒரே ஒரு பிடி சோறு கொடுங்கள்' என்று உங்களிடம் கேட்டால் என்ன சொல்லுகிறீர்கள்? 'இல்லை; இன்னும் இரண்டு நாட்களுக்குப் பால் அருந்துங்கள்; அதன் பிறகு சோறு உண்ணலாம்' என்று கூறுகிறீர்கள்!

"அதையே நானும் உங்களிடம் கூறுகின்றேன்; உங்கள் கோரிக்கைகள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன; பொருளாதார நோய் குணமானவுடன் உங்கள் கோரிக்கைகளை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து முடிப்போம்!"

---முதலமைச்சர் அண்ணா

(ஸ்டான்லி கல்லூரி மருத்துவப் பணி மகளிர் மாநாட்டில்)

பர்மா, இலங்கையிலிருந்து வந்த மாணவர்கள்

தமிழகப் பள்ளிகளில் சேருவதற்கு வசதி

சென்னை, சூன் 27—

"பர்மா இலங்கை போன்ற வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து நமது மாநிலப்பள்ளிகளில் சேரும மாணவர்களை. அவர்கள் எந்த வகுப்பில் சேரத் தகுதியுள்ளவர்கள் என்பதைக் கண்டறிந்து சேர்க்க அனுமதிக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆரம்பமே இப்படி!

கே. வினாயகம் :—"முதலமைச்சர் அண்ணா அவர்கள் நல்ல திறமைசாலி; அதில் ஐயமில்லை; ஏனென்றால், அவர்கள் பேராசிரியர் சிக்காவிடமே பொருளாதாரம் பயின்றவர்கள்."

அண்ணா :—"கனம் உறுப்பினர் பேச்சின் துவக்கத்திலேயே நான் குறுக்கிட நேர்ந்தமைக்காக வருந்துகிறேன். பேராசிரியர் சிக்கா, பொருளாதார ஆசிரியர் அல்லர்."

கே. வினாயகம்:—"பச்சையப்பன் கல்லூரியில் அப்போது பொருளாதாரத்திற்கான பேராசிரியரே கிடையாது; அதனால், பேராசிரியர் சிக்கா அவர்களே பொருளாதார வகுப்பை நடத்தினார்; அதன்பிறகு பேராசிரியர் அனந்தநாராயணன் ஆசிரியராக வந்தார்."

அண்ணா:—"பேராசிரியர் சிக்கா வரலாற்று ஆசிரியர்தான். அவர் இருக்கும்போதே பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் அனந்தநாராயணனும், இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள பேராசிரியர் என். ஜி. ரங்காவும் இருந்தார்கள் என்பதை உறுப்பினர் அவர்கட்கு நினைவூட்ட விரும்புகிறேன்."

—சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது (27—6—67)

ஒன்றேனும் பொருத்தமாக இல்லையே!

கே. வினாயகம் :—"ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் வெறும் போராட்டக்காரர்களாக இருந்த நேரத்தில் வரி விதிப்பைப் பற்றி 'சனவரி—பிப்ரவரிதான் பாக்கி' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவர்கள், இப்போது வரியின் முக்கியத்துவம் அறிந்து வரி விதித்துள்ளனர்."

அண்ணா :—"சனவரி-பிப்ரவரி தான் பாக்கி; மற்ற எல்லா வரிகளையும் போட்டுவிட்டார்கள்' என்று கூறியவர் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஆவார் என்பதைக் கவனப்படுத்துகிறேன்"

கே. வினாயகம் :—"அப்படியானால், எங்கள் ஆசிரியரிடம்தான் இவர்கள் கற்றுக்கொண்டார்கள் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி."

அண்ணா :—"திரு. சத்தியமூர்த்தி இப்படிக் கூறிய நேரத்தில் நானோ, திரு. வினாயகமோ அவருக்குச் சீடராக இருந்ததில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

—சட்டமன்றத்தில் 27—6—67

அமைச்சர்கள் மீது அரோரா!

[இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.]

மத்திய அமைச்சர் இருவர்மீது குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

'பிர்லாவின் பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் வேலைசெய்கிறார்கள்' என்பது குற்றச்சாட்டு!

'பிர்லாவின் ஆட்கள்' என்று பலர்மீது முன்பு குற்றச்சாட்டுகள் வந்துள்ளன!

"நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர்—ஐம்பது பேர்களுக்குமேல் - பிர்லா நிர்வாகத்திடம் மாதப் பணம் வாங்கியபடி இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று உள்துறை அமைச்சராக இருந்த குல்சாரிலால் நந்தா, ஒரு தடவை தெரிவித்தார்; உள்துறை அமைச்சர்—அவருக்குத் திட்டவட்டமாகத் தெரித்திருக்க வேண்டும்!

அதேவிதக் குற்றச்சாட்டுக்கள், வி. கே. கிருஷ்ணமேனன் அவர்களால்—அவர் காங்கிரசுக் கட்சியில் இருந்தபொழுதே—கூறப்பட்டன!

அவை, பொதுவாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களேயன்றி, தனிப்பட்ட நபர்களைக் குறிப்பிட்டு, குற்றச்சாட்டுக்கள் இதுவரை வரவில்லை; 'வரவில்லை' என்றால், வெளிப்படையாக வரவில்லை.

இப்பொழுது வந்துள்ள குற்றச்சாட்டுக்கள், குறிப்பிட்ட இரு அமைச்சர்களைச் சுட்டிக் காட்டுகின்றன!

காங்கிரசு அமைச்சர்களைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் ஏராளமாக வந்துள்ளன! பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரோன், ஒரிசா முதலமைச்சர் பட்நாய்க் ஆகியவர்கள்மீது குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன.

மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், மைசூர் ஆகிய மாநிலங்களிலும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் வந்தன!

கெய்ரோன்மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரின் விசாரணைக்கு விடப்பட்டது; குற்றச்சாட்டுக்களில் சில நிரூபிக்கப்பட்டு, கெய்ரோன், முதலமைச்சர் பதவியைவிட்டு வெளியேறும் கட்டம் பிறந்தது!

பட்நாயக்மீது வீசப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி மத்திய அரசாங்க இரகசியப் பிரிவு பரிசீலனை செய்தது. அதன் இரகசிய அறிக்கை, இரண்டாண்டுகளுக்கு முன்பு நாடாளுமன்றத்தின்முன் தோழர் எச். வி. காமத் அவர்களால் கொண்டுவரப்பட்டது. அரசாங்கம் ஒத்துக் கொள்ளாமலும், மறுக்கமுடியாமலும் தவித்தது!

இப்பொழுது அமைச்சர்கள் இருவர்மீது குற்றச்சாட்டுக்கள் கிளம்பிய விதத்தில் ஒரு புதுமை இருக்கிறது.

முன்பு அமைச்சர்கள்மீது எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்களை எழுப்புவார்கள்; 'அமைச்சர்களுக்குக் களங்கம் உண்டாக்கும் முயற்சி' என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் உரிமைப் பிரச்சினை கிளப்பி, உரிமைக் குழு விசாரணைக்கு அனுப்புவார்கள்.

இப்பொழுது அதற்கு நேர் மாறுதலான நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன!

காங்கிரசு அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டுக் கிளப்பியவர் ஒரு காங்கிரசுக்காரரே!

'அமைச்சர்கள் மீது களங்கம் கற்பிக்கும் முயற்சி' என்று உரிமைப் பிரச்சினை எழுப்புபவர்கள், இப்பொழுது எதிர்க் கட்சியினர்!

'பிர்லா'வின் பணத்தைப் பெறுபவர்கள்—என்று அமைச்சர்கள்மீது குற்றஞ்சாட்டியவர், மாநிலங்களவையில் காங்கிரசு உறுப்பினராக இருக்கும் அர்ச்சுன அரோரா என்பவர்!

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அவர், தொழிலாளர் இயக்கங்களில் பங்கு கொண்டவர்; 1960-லிருந்து மாநிலங்களவையில் உறுப்பினராக இருக்கிறார்.

'காங்கிரசு அமைச்சர்களில் சிலர் பிர்லாவின் கையாட்கள்' என்றும், 'பணம் பெறுகிறார்கள்' என்றும் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் அர்ச்சுன அரோரா குற்றஞ்சாட்டினார். 'இவ்வாறு குற்றஞ்சாட்டினார்' என்பது, பத்திரிகைகளில் வெளிவந்தது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும்—மாநிலங்களவை, மக்களவை இரண்டிலும்—இதுபற்றிய கேள்விகள் எழுந்தன; அதைப் பற்றி விசாரித்துப் பின்பு தெரிவிப்பதாகத் தலைமையமைச்சர் கூறினார்.

குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்களின் பெயர்கள் :—

சத்திய நாராயண் சின்கா,
கிருஷ்ண சந்திர பந்த்.

சத்திய நாராயண் சின்கா, 1948-லிருந்து 1967-வரை பாராளுமன்ற விவகார அமைச்சராக இருந்தவர்.

இந்தப் பொதுத்தேர்தலுக்குப் பின்பு, இந்திரா காந்தி புதிய அமைச்சரவை அமைக்கப்பட்ட பொழுது இவர் பெயர் விடுபடும் நிலையில் இருந்தது; கடைசியில் அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்—இலாகா இல்லாத அமைச்சராக! (இவரைப் பற்றிப் பேசும்பொழுது, 'செனட் மகாராஜா' என்று ஓர் உறுப்பினர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.)

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட கிருஷ்ண சந்திர பந்த், காலஞ்சென்ற கோவிந்த வல்லப பந்தின் குமாரர்! 1962-ல் நாடாளுமன்ற உறுப்பினரானார்; 1967-ல் நிதி இலாகாவில் அமைச்சராகப் பதவி பெற்றுள்ளார்.

இந்த இரு அமைச்சர்கள் மீதும் வந்த குற்றச்சாட்டுக்களைப் பரிசீலனை செய்த தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்றத்தில், அறிக்கை ஒன்றை முன்வைத்தார்; 'அர்ச்சுன் அரோரா தந்த குற்றச்சாட்டுக்களை துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், உள்துறை அமைச்சர் சவான், வெளிவிவகார அமைச்சர் சக்ளா ஆகிய மூவர் கொண்ட குழுவிடம் தந்ததாகவும், அவர்கள் பரிசீலனை செய்ததில் குற்றச்சாட்டுக்களுக்குத் தக்க ஆதாரமில்லை என்று முடிவு கூறியதாகவும்', அந்த முடிவைத் தாம் ஏற்றுக்கொள்ளுவதாகவும் அவர் கூறினார்.

மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்த அறிக்கைக்கு எதிர்க் கட்சிகளிடமிருந்து எதிர்ப்பு வந்தது: 'பரிசீலனை செய்த முறை சரியல்ல' என்றும், 'நீதிபதியின் விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்' என்றும் சுட்டிக் காட்டப்பட்டன.

"குற்றச்சாட்டுக்கள் எவை? அதற்குத் தரப்பட்ட ஆதாரங்கள் எவை? அவைமீது எவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது?" என்று நாடாளுமன்ற விதிமுறைகளின்படி நான் ஆதாரங்களைக் கேட்டபொழுது, அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை.

குற்றச்சாட்டுக்கள் என்ன—ஆதாரங்கள் என்ன என்பவைகளே வெளியில் காட்டப்படாமல், மூடுமந்திரமாக வைக்கப்பட்டுள்ளன!

குற்றச்சாட்டுக்களின் விவரம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கைகளில் இருக்கின்றன; அவைகளை நாடாளுமன்றத்தின்முன் வைக்க அவர்கள் துடிக்கிறார்கள்; இதுவரை அதற்கு அனுமதி தரப்படவில்லை!

குற்றச்சாட்டுக்கள் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டால்தான், பிறகு பத்திரிகைகளில் அவைகளை வெளியிட முடியும்.

குற்றச்சாட்டுக்களை வெளிப்படுத்த மற்றொரு முறை கையாளப்பட்டது. 'அமைச்சர்கள்மீது ஓர் உறுப்பினர் அவதூறு கூறுகிறார்; இது இது ஒழுங்குப் பிரச்சினை' என்று மாநிலங்களவையில் பிரச்சினை எழுந்தது; அதை மாநிலங்களவைத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை!

அமைச்சர்கள் இருவரும் மக்கள்சபை உறுப்பினர்கள்; பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள்.

"மக்களவையைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் மீது அவதூறு கூறப்பட்டுவிட்டது; மக்களவை உறுப்பினர்களாக உள்ள நாங்கள், எங்களைச் சேர்ந்த இருவர்மீது களங்கம் கூறப்படுவதை ஓர் உரிமைப் பிரச்சினையாகக் கருதுகிறோம்; இதை விசாரிக்க வேண்டும்" என்று, மக்களவையில், இடதுசாரிக் கம்யூனிஸ்டுத் தலைவர் பி. இராமமூர்த்தி தீர்மானம் கொண்டுவந்தார்.

இதில் தம்முடைய முடிவைக் கூறாமல், சபையின் முடிவுக்கு விடுவதாக அவைத் தலைவர் சஞ்சீவி செட்டி அவர்கள் விட்டுவிட்டார். காங்கிரசின் கட்சி பலம், அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்துவிட்டது!

அமைச்சர்கள்மீது இதே குற்றச்சாட்டுக்களை மக்களவையைச் சேர்ந்த எஸ். எம். பானர்ஜி என்பவர் கூறினார்.

"இது, உரிமைப் பிரச்சினை" என்றார்கள் சிலர்!

"ஆமாம்; உரிமைப் பிரச்சினை என்ற குற்றத்தை விசாரியுங்கள்; நான் தயார்" என்று எஸ். எம். பானர்ஜி கூறுகிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மத்திய அரசு உதவியிருந்தால் விற்பனை வரி உயர்வைத் தவிர்த்திருக்கலாம்

சிறு உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் டெல்லி வரி விதிப்பை எதிர்க்காதேன்?

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா பதில்

சென்னை, ஜூன் 24— மதுவிலக்குச் சட்டம், விற்பனை வரிச் சட்டம் ஆகியவைகளுக்கான திருத்த மசோதாக்கள் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேறின.

தமிழக மதுவிலக்குச் சட்டம் 1937-ல் நிறைவேற்றப்பட்டது.

அரசினரின் அனுமதி வைத்திருப்பவர்களுக்கு விற்கப்படும் அயல்நாட்டு மது வகைகளிமீது, ஒரு ரூபாய்க்கு 50 காசு வரியாக இருப்பதை ஒரு ரூபாய்க்கு 75 காசாக உயர்த்துவதே முதல் மசோதாவின் நோக்கமாகும்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கே. விஸாயகம், "ரூபாய்க்கு ரூபாய் வரிப் போடலாம்' என்று கருத்துக் கூறினார்.

முதலமைச்சர் அண்ணா அதற்குப் பதிலளிக்கையில், "யோசனைக்கு நன்றி; தக்க காலத்தில் இந்த யோசனை செயற்படுத்தப் படும்' என்று கூறினார்.

"மசோதாவின் விவரங்களை நிறைவேற்றப்பட்ட பிறகு, மசோதாவைச் சட்டமாக்கவேண்டும்" என்று முதலமைச்சர் அண்ணா முன்மொழிந்தார்.

மசோதா சட்டமாக நிறைவேறியது.

விற்பனை வரி திருத்த மசோதாவின் விவரங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறு அமைச்சர் கே. ஏ. மதியழகன் முன்மொழிந்தார்.

வரவு — செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் விற்பனை வரி வீதங்களை மாற்றியமைக்க இந்த மசோதா வகை செய்கிறது.

விற்பனை வரி விலக்கு வரம்பை ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தியிருப்பதை டாக்டர் ஹரனே (சுதந்திரா) வரவேற்றார்; 'இந்த வரம்பை மேலும் உயர்த்த வேண்டும்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

எதிர்க் கட்சித் தலைவர் 'பண வீக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் வரிகளை உயர்த்துவது கேட்டிக் கணக்கான பொதுமக்களின்பாதிக்கும்' என்றார்.

அமைச்சர் கே. ஏ. மதியழகன்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"நல்ல காரியங்களுக்காக வரி விதிப்பதால் பணவீக்கம் ஓரளவு குறையும். மத்திய விற்பனை வரி 3 சதவிகிதமாக இருக்கும்போது 2 சதவிகிதமாக வரி வீதம் இருந்து வந்ததால் ஏற்பட்டுவந்த இழப்பைச் சரிக்கட்டவே வரி விதம் உயர்த்தப்படுகிறது.

ஆடம்பரப் பொருட்கள்மீது வரி விதிக்கிறோமே தவிர மண்ணெண்ணெய், காபி, தேயிலைக்கு வரி உயர்த்தவில்லை. இன்றியமையாது மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட வில்லை."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"எனதருமை பொறுத்தமட்டில் விற்பனை வரிகளில் பல வரிகளை—குறிப்பாக ஏழை மக்கள் பயன் படுத்தும் இன்றியமையாத பொருட்கள் மீதுள்ள வரிகளை நீக்கவோ அல்லது குறைக்கவோ விரும்புகிறேன்.

மத்திய அரசினர், நான் கேட்டுக்கொண்ட உணவுக்கான உதவித் தொகையை அளித்திருந்தால், இந்த வரி உயர்வு கூடத் தேவைப் பட்டிருக்காது.

இந்த மாநில அரசின் நிதி நிலைமை சீர்பெற்றவுடன் அல்லது வலுவடைந்தவுடன் ஏழை மக்களின் நலனுக்குப் பாதகமாக உள்ள வரிகளை நீக்கிவிடுவோம்.

காபி, தேயிலை, இரசாயன உரங்கள் ஆகியவற்றில் நாங்கள் வரியை உயர்த்தவில்லை. இந்தப் பொருட்களிமீது முன்னைய அரசினர் வரி விதித்ததன் நியாயம் என்னவோ?

கே. விஸாயகம் :—"மத்திய விற்பனை வரி வீதம் 3 சதவீதம் எனக் கூறி, மாநில விற்பனை வரியை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்துகிறீர்களே—வரி விதிக்க மத்திய அரசிடம் ஏன் சேர்ந்துகொள்ள வேண்டும்?"

அண்ணா :—"மத்திய அரசுடன் சேரவில்லை. இந்தச் சிறு வரி உயர்வால் ஆத்திரப்படும் உறுப்பினர், ஏன், மொராஜி தேசாயின் கடுமையான வரி விதிப்புக்கு உடன்தையாக இருக்க வேண்டும்?"

விற்பனை வரி மசோதாவின் விவரங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், அமைச்சர் கே. ஏ. மதியழகன், 'விற்பனை வரி திருத்த மசோதா சட்டமாக வேண்டும்' என்று முன் மொழிந்தார்; திருத்த மசோதா சட்டமாக நிறைவேறியது.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு வேளாண்மைப் பயிற்சி

லக்னோ, ஜூன் 28— ஐ. ஏ. எஸ்., பி. சி. எஸ்., அதிகாரிகளின் குழுக்கள், கான்பூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்து, மூன்று மாதம் வேளாண்மையில் நேரடிப் பயிற்சி பெறுவர்.

அவர்கள் இப்பயிற்சிக்குப் பிறகு இம்மாநிலத்தில் நடந்து வரும் பெரிய வேளாண்மைத் திட்டப் பணிகளை மேற்பார்வை செய்யும் திறன் பெற்றிருப்பர். இப்பயிற்சிக் காகும் செலவில் 75 சதவிகிதத் தைத் தர மத்திய அரசு இசைந் துள்ளது.

இதர மாநிலங்களிலும் இது போன்ற பயிற்சித் திட்டம் மேற் கொள்ளப்படும்.

100 நாள் சாதனை!

காமராஜ், இராஜாஜி—இரண்டு பேருமே ஒதுங்கி நிற்பதால், தி.மு.க-வினருக்குத் தங்கள் மனோதர்மப்படி சர்வசுதந்திர மாகச் செயல் புரிய வாய்ப்புகள் திறந்துகிடக்கின்றன! அவர்களும், செயல் புரிவதில் நல்ல வேகம் காட்டுகிறார்கள்!

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த நூறு நாட்களில், மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், இங்கே அரிய பல சாதனைகள் செய்திருக்கிறார்கள்! அந்தச் சாதனைகளில், விளம்பரம் பெற்றவை சில! மற்றும் பல வெளியே தெரியாமல் குடத்துள் விளக்காய் இருக்கின்றன!

பஞ்சம் ஒழிந்தது!

உணவுத் துறையில் படி அரிசி போட்டதற்கு நிகரான இன்னொரு சாதனை, இப்போது அரிசிப் பஞ்சம் என்பது அடியோடு ஒழிக்கப்பட்டிருப்பதாகும்!

கடைகளில் முன்பு இருந்த அளவுக்கு மட்டமான அரிசி இப்போது இல்லை! 'இருப்பு இல்லை' என்ற அறிவிப்புப் பலகையும் இல்லை!

முன்பு அதிக வீலை கொடுத்தாலும் கிடைக்காத நயமான அரிசி இப்போது சுலபமான வீலையில் தாராளமாகக் கிடைக்கிறது!

நெல் வீலை எங்கும் இறங்குமுகமாகிவிட்டது! ரூ. 250-க்கு விற்ற பொதி நெல், இப்போது ரூ. 180-க்கு விற்கிறது! 'இப்படி வீலை குறைந்துவிட்டதே' என்று விவசாயிகள் அவ்வளவாகச் கலித்துக்கொள்ளவும் இல்லை!

சீர்திருத்தங்களுக்கு முன்னேடி!

நீண்ட தூரப் பஸ் பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டது என்பது, ஏற்கனவே வந்த செய்தி; ஆனால், இந்த அரசாங்கப் பஸ் போக்குவரத்தில் பல சிறு சிறு மாறுதல்களும், ஊழியர்க ளிடையே உற்சாகமும், பொதுமக்களுக்கு மிகுந்த ஆறுதலே அளிப்பவையாக இருக்கின்றன!

வண்டிகள், பொது இடங்கள் முதலியவைகளில் தூய தமிழ்ப் பெயர் ஏழுத்துக்கள் பிரகாசிக்கின்றன!

ஏற்படப்போகும் பல சீர்திருத்தங்களுக்கு முன்னேடி இவை!

—சிங்கப்பூர் 'தமிழ்நேசன்' (20—6—67) இதழில்

ஆண்ட கட்சியை மக்கள் அகற்றியதேன்?

ஆராய்ச்சி செய்யும் காங்கிரசாருக்கு முன்னாள் காங்கிரசுக்காரர் தரும் பதில்

"கடந்த பொதுத் தேர்தலில், இருபதாண்டுக் காலம் ஆண்ட கட்சியை இறக்கிவிட்டு மாற்றுக் கட்சியை ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருக்கின்றனர் மக்கள்! 'இதற்குக் காரணம் என்ன' என்ற ஆராய்ச்சி காங்கிரசுக் கட்சியின் தரப்பில் நடைபெற்று வருகிறது; பல காரணங்களும் சொல்லப்படுகின்றன. 'வெறும் பிரசாரத்தின் மூலமே இந்த மாற்றம் மிகழ்ந்துவிட வில்லை; மாறாதல் வேண்டும் என்று விருமியதால்தான் இப்படி நடந்தது' என்று கூறுவதும் சரியலல!

"கடந்த இருபது ஆண்டுக்காலமாக முன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும், அவற்றின் பலன் தங்களுக்குக் கிடைக்கவில்லை—சமதர்மம் கிட்டவில்லை என்பதால்தான் மக்கள், ஆளுங்கட்சியை மாற்றினர்! இதுதான் உண்மையான காரணம். இதைக் காங்கிரசுக்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

"மக்களின் குறைகள் கடந்த இருபாண்டுக் காலமாக நீக்கப்படவில்லை! முன்று ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன்கள் முழுவதும் யாருக்கோ போய்ச் சேர்ந்தன! குடிசைவாழ் ஏழை மக்கள் ஏழைகளாகவே இருந்துவருகின்றனர்—வறுமையிலேயே உழன்றுவருகின்றனர்! எனவேதான், ஆண்ட கட்சியை அகற்றினர்!

"தேர்தல் பிரசாரத்தின்போது மக்களிடையே சென்று, வறண்ட தலேயுள்ள ஒரு சிறுவனே அழைத்துத் தலேயைத் தடவிப்பார்த்து, 'ஐயோ, தலேயில் எண்ணெய்கூட இல்லேயே; எண்ணெய் கொடுக்கத்தான் மூன்று திட்டங்கள் போட்டோம்; பலனெல்லாம் எங்கோ போய்ச் சேர்ந்துவிட்டது; இன்னொரு ஐந்தாண்டுத் திட்டம் போடுகிறோம்; உன் பெற்றோரின் வார்க்களை எங்களுக்கு வாங்கிக்கொடு' என்று கூறி, வறண்ட தலேக்கு ஒரு திட்டம்—கன்னம் ஒட்டிய சிறுவனுக்கு ஒரு திட்டம்—என்று இப்படிப் பேசிக்கொண்டே இருந்தது தான் காங்கிரசுத் தோல்விக்குக் காரணம்.

"மக்களுக்குச் சோறு கிடைக்கவில்லே; எனவே, சனநாயக நீதியில் ஆட்சியை மாற்றிவிட்டார்கள்! இதை ஆராய்ந்து கொண்டிருக்கத் தேவையில்லே! 'மூன்று திட்டங்கள் முடிந்து விட்டன; யாரோ பலன் அடைந்து வருகிறார்கள்; இன்னும் இரண்டு திட்டங்கள் வந்தால் ஏழைகள் பலன் அடைவார்கள்' என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லே!

"இன்று ஆட்சி மாறிவிட்டது. ஆட்சிபீடத்தில் உள்ள தி.மு. கழகத்துக்கும், அதற்குப் பக்கத் துணேயாக இருந்துவரும் கூட்டணிக் கட்சிகளுக்கும்தான் மக்களே வாழவைப்பதில் பொறுப்பு இருக்கிறது! எனவேதான், அதற்கான முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது!

"மக்களுக்குத் தேவையான பல நல்ல திட்டங்களேத் தீட்ட வேண்டுமாளல் அதற்கு முலாதாரமான பணம் போதிய அளவில் இல்லே; இருக்கின்ற குறைந்த வசதிகளேக் கொண்டே நல்ல முறையில் இந்த வரவு-செலவுத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது; எனவே, இதனே வரவேற்புப் பாராட்டுகிறேன்."

--சாத்தூர் இராமசாமி நாயுடு
(சட்டமன்றத்தில்)

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி தொடக்க விழா

அமைச்சர் சத்தியவாணிமுத்து கலந்துகொள்கிறார்

சென்னை, ஜூன் 27—

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் 23-ம் ஆண்டுத் தமிழ் வகுப்புகள் தொடக்க விழா, 29—6—67 6-30 மணிக்கு, சென்னை—பவழக்காரத் தெருவில் உள்ள ஏ.ஆர்.சி. மகளிர் உயர் பள்ளியில் நடைபெறும்; திரு. கோ. முத்து தலேமை வகிப்பார்; அமைச்சர் சத்தியவாணிமுத்து, வகுப்பினத் தொடங்கிவைப்பார்.

சென்னை-மயிலையில் தமிழ் வளர்ச்சிப் பேரவை

தமிழ் வளர்ச்சிப் பேரவையின் அமைப்புக் கூட்டம் 18—6—67-ல் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார் தலேமையில்—திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. முன்னிலேயில் நடைபெற்றது; அது போது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறப்புத் தலேவர் : குன்றக்குடி அடிகளார்; தலேவர் : பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்; துணேத் தலேவர்கள் : ப. இராமன் எம்.ஏ., டி. என். சுகிசுப்பிரமணியம்; செயலர் : கோமகன்; துணேச் செயலர் : எஸ். வி. வேலு; பொருளாளர் : க. சாரங்கன்.

செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., புலமைப் பித்தன், கவிஞர் வரதராசன், திருமதி வெற்றிச்செல்வி ஆகியோரோடு மற்றும் ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

புலவர் வகுப்பு

தமிழ் வளர்ச்சிப் பேரவையின் தலேயாய பணிகளில் ஒன்றுகப் புலவர் வகுப்பு தொடங்கி நடத்தப் படும்.

தமிழ்ப் பற்றுமிக்க முப்பதாண்டு நிறைவுற்றவர்களும், ஆசிரியர் பணியில் முன்று ஆண்டுப் பயிற்சி உடையோரும் இக்கலூரியில் சேர்ந்து பயின்று பயன் எய்தலாம்.

தி.மு.க. அரசினர் வரவு-செலவுத் திட்டம்

வலது கம்யூனிஸ்டுக் கட்சி பாராட்டு

சென்னை, ஜூன் 28—

"தமிழகத்தில் காங்கிரசு அல்லாத முதல் அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டம், காங்கிரசுக் கட்சி இதுவரை அளித்துள்ள வரவு-செலவுத் திட்டங்களுக்கு முரண்பட்டும், புதிய உத்வேகத்தையும் வலுவையும் ஊட்டக்கூடிய தாகவும் அமைக்துள்ளது"

என்று இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் (வலது) தமிழக மாநிலச் செயற்குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மாநில அரசுக்கும்—மத்திய அரசுக்கும் இடையேயுள்ள பொருளாதார, நிதி தொடர்புகளினுள் குடியரசுச் சட்ட வரையறைகளுக்கும் அப்பால் திறமையான முறையில் வரவு-செலவுத் திட்டத்தை அளித்துள்ள தமிழக மாநில முதலமைச்சரும், நிதித் துறையினரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்."

ஏழை உழவர்களுக்குப் புறம்போக்கு நிலம்!

தமிழக அரசின் ஏற்பாடு

சென்னை, ஜூன் 26—

"தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 18,000 முதல் 20,000 ஏக்வரை சாகுபடிக்குத் தகுதியான புறம்போக்கு நிலங்கள் இருப்பதாகத் தெரிகிறது; அவற்றை, நிலமற்ற ஏழை உழவர்களுக்கு வழங்க தமிழக அரசு சிந்தித்துவருகிறது"

என்று உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறியவர்கள்

மீண்டும் பள்ளியில் சேரத் தடையில்லை

'வசதியின்மையைப் பொறுத்தே இடம் மறுக்கப்படுகிறது'--- கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, சூன் 27—

"எஸ். எஸ். எல். சி.-யில் தவறி விட்ட மாணவர்கள், மீண்டும் அவரவர் படித்த பள்ளியில் இரண்டாவது ஆண்டும் படிக்க அனுமதிக்கப்படுகிறது; சில இடங்களில் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்றால். அதற்கு இடம் போதாமையே காரணம்; தேர்வில் தவறிய மாணவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளும் போது பத்தாவது வகுப்பில் தேறி எஸ். எஸ். எல். சி.-க்கு வரும் மாணவர்கட்கு இடம் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்; பள்ளியில் சேராமல் வீட்டில் இருந்தவாறே படித்து மீண்டும் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத வசதி இருப்பதால், வீட்டிலிருந்தபடியே படிக்கலாம்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் பதிலளித்தார்.

கே:—"இப்பற்றாக்குறையைத் தவிர்க்க மேலும் அதிகப்படியான பள்ளிகள் திறக்கப்படுமா?"

பதில்:—"இப்போது பல இடங்களில் துவக்கப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதிய மாணவர்கள் கிடைக்காத நிலையும் இருக்கிறது; எனவே, கூடுமானவரை அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது."

கேள்வி:—"பல பள்ளிகளில் கட்டிட வசதியில்லாமல் மரநிழல்களில் வகுப்பு நடந்துவருவதால், கட்டிடம் கட்ட உடனடியாகத் தனி மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?"

பதில்:—"வகுப்புகள் நடத்த பெரிய கட்டிடம்தான் என்பதில்லாமல் கீற்றுக் கொட்டகை போட்டுக் கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது."

பங்கீட்டு முறையில் இரசாயன உரம்

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, சூன் 27—

"மாநிலம் முழுவதும் இரசாயன உரம் வழங்குவதற்குப் பங்கீட்டு முறை கொண்டுவருவது பற்றி முடிவு செய்யப்படும்"

என்று சட்டமன்ற மேலவையில், வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கும் நைட்ரஜன் உரம், மாநிலத்தின் தேவைக்குக் குறைந்ததாகவே இருக்கிறது.

"ஒதுக்கப்பட்ட முழு அளவு உரத்தையும் ஒரே நேரத்தில் மொத்தமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

"மாவட்டக் கலெக்டர்கள்—கூட்டுறவு அலுவலர்கள்—வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஆகியோருடன் கலந்து பேசி கிடைக்கின்ற நைட்ரஜன்உரத்தை நியாயமாக வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

உழவர்களுக்கு உரம் வழங்குவதில் தவறு நேர்ந்தால் அரசின் கவனத்திற்கு வரும்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

உழவர்களுக்கு நியாயமான அளவில் உரம் கிடைப்பதறகுப் பங்கீட்டு முறையைச் செயல்படுத்த அரசு ஆலோசித்து வருகிறது; இதுபற்றி இன்னும் ஒரு மாதத்திற்குள் முடிவு செய்யப்படும்.

சோதனை செய்து பார்ப்பதற்காகத் தஞ்சை மாவட்டத்தில் தீவிரச் சாகுபடிப் பகுதியில் மட்டும் உரம் பங்கீடு அட்டை முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

உரம் பங்கீட்டு முறைக்கு உழவர்கள் வட்டத்தில் நல்ல வரவேற்பு இருக்கிறது.

தமிழகத்தில் 96 கலப்பு உரச் சாலைகள் உள்ளன; அவற்றில் 70 தனியார் துறையைச் சார்ந்தவை."

மாவட்ட உயர்நிலைப் பள்ளிகள் எதிர்காலம்

அரசினர் பள்ளிகளாக மாறும்

சென்னை, சூன் 21—

"உள்ளாட்சிமன்றங்களால் நடத்தப்பட்டுவரும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே ஏற்கும் திட்டம் இல்லை"

என்று சட்டமன்றத்தில், கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மாவட்டக் கழகப் பள்ளிகளை நிர்வகிக்க ஒரு தனிக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அரசினர் பள்ளிகளின் நிர்வாகத்துக்கும்—மாவட்டக் கழகப் பள்ளி நிர்வாகத்துக்குமிடையே சில பல வேறுபாடுகள் நிலவுவதாகவும், இந்த வேறுபாடுகளை எந்த வகையில் போக்கலாம் என்று ஆராயப்படுவதாகவும், வேறுபாடுகள் நீக்கப்பட்டவுடன் இவையும் அரசினர் பள்ளிகளாக மாற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பர்மா, இலங்கையிலிருந்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு, முன்பு 7-ம் வகுப்பு வரை பள்ளி இன்ஸ்பெக்டர்களிடமும், 8-வது வகுப்பும் அதற்கு மேலும் இடைநிலைக் கல்வி இயக்குநரிடமும் இருந்துவந்தது; பின்னர் அதனை மாற்றி, அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களிடமே அந்தப் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது. முன்னர் படித்த பள்ளியிலிருந்து உரிய சான்றிதழ்களுடன் வரும் மாணவர்கள் நமது மாநிலப் பள்ளிகளில் சேருவதில் சிரமம் எதுவும் இல்லை"

என்று, சட்டமன்றத்தில், ஏ. ஜி. பாலகிருஷ்ணன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்தார்.

சென்னை 98-வது வட்டம் மாநகராட்சிப்பள்ளி துவக்கவிழா

சென்னை 98-வதுவட்டம் சி.ஐ.டி. நகரில், 30—6—67 மாலை 5-30 மணிக்கு துணை மேயர் தா. கிருட்டினமூர்த்தி தலைமையிலும்—திரு. ஆர். பூவராகமூர்த்தி பி.ஈ. முன்னிலையிலும் மாநகராட்சிப் பள்ளித் துவக்கவிழா நடைபெறும்; சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு. ர. பெருமாள், பள்ளியைத் துவக்கிவைப்பார்.

திருமணம்

நரோடு நகராட்சிமன்ற தி.மு.க. உறுப்பினர் தோழர் செ. அரங்கராசனுக்கும்—தோழியர் சரசுவதிக்கும், 30—6—67 காலை 7-மணியளவில், ஈரோடு கந்தசாமி செட்டி தோட்டம், 27-எண்ணுள்ள இல்லத்தில் உடுமலை ப. நாராயணன் எம்.பி. தலைமையில் திருமணம் நடைபெறும்.

தனியார் பள்ளிகளில் 'ஸ்பெஷல் பீஸ்' வசூல்

இரசீது தர மறுத்தால் நடவடிக்கை

சென்னை, சூன் 27—

"தனியார் நடத்தும் பள்ளிகளில், 'ஸ்பெஷல் பீஸ்' என்று சொல்லிப் பணம் வசூலிக்கிறார்கள்; ஆனால் அதற்குரிய இரசீது தர மறுக்கிறார்கள். நானே மூன்றாம் வகுப்புப் பையனுக்கு ரூ. 30 கொடுத்து, இரசீது கேட்டதற்குத் தர மறுத்துவிட்டனர்; இது குறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?"

என்று சட்டமன்றத்தில் வி. எஸ். கோவிந்தராசன் கேட்டார்.

"இப்படிப்பட்ட தகவல்களை எழுதியனுப்பினால், கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று பதிலளித்தார் — கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன்.

சாதிப் பெயரால் இயங்கும் பள்ளிகள்: மானியம் நிறுத்தப்படுமா?

சட்டமன்றக் கேள்விக்கு அமைச்சர் தந்த பதில்

சென்னை, சூன் 27—

"சாதிப் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் பள்ளிகளுக்கு மானியம் தருவது மறுக்கப்படுமா?"

என்ற கேள்விக்கு, சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்ததாவது:—

"சில பள்ளிகளுக்கு, முக்கியப் பெரியவர்களின் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன; அல்லது நன்கொடைகள் கொடுத்தவர்களின் பெயர்கள் இடப்படுகின்றன. அப்படிப்பட்டவர்களின் பெயருக்குப் பின்னால் சாதிப் பட்டமும் ஒட்டிக்கொண்டிருக்குமானால், அதையும் சேர்த்துப் பள்ளியின் பெயரை வைக்கவேண்டியுள்ளது.

"பள்ளி எந்தப் பெயரில் இருக்கிறது என்பதல்ல பிரச்சினை; பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு சாதிப்பாகுபாடின்றி வாய்ப்புக் கொடுக்கப்படுகிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டும். அப்படி ஏதேனும் ஒரு சாதிக்குச் சலுகை காட்டி மற்றவர்களுக்கு மறுக்கப்படுமானால் அதனை நீக்க அரசு ஈடுபடும்."

'கல்வி நிலையங்களில் போலீசார் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்'

முதலமைச்சர் உறுதிமொழி

சென்னை, சூன் 26—

"கல்வி நிலையப் பொறுப்பாளர்கள் போலீசின் உதவிதேவை என்று கேட்டால் ஒழிய, கல்வி நிலையங்களுக்குள் போலீசார் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்ற மேலவையில் கூறினார்.

1965 சனவரி 25-ல, மதுரை அமெரிக்கன் கல்லூரிக்குள் போலீசார் நுழைந்த நிகழ்ச்சி தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்ட உறுதிமொழியை முதலமைச்சர் அண்ணா அளித்தார்.

படைச் செலவைக் குறைத்து பசிப் பிணியை நீக்குவீர்!

சென்னை, சூன் 28—

"மத்திய அரசு பலமுள்ளதாக இருக்கவேண்டும்—ஒப்புக்கொள்கிறேன். எதற்காக அது பலமுள்ள அரசாக இருக்கவேண்டும்? பலர் சொல்வதுபோது, தேசிய ஒருமைப்பாட்டைக் காக்க—உண்மையைச் சொல்வதானால், இந்தியாவின் சுதந்தரத்தைக் காக்க மத்திய அரசு பலமுள்ளதாக இருக்கவேண்டும்.

"அதற்காக, மத்திய அரசில் ஏன் சுகாதார இலாகா? கல்வி இலாகா? மாநில அரசில் அந்த இலாகாக்கள் இருக்கும்போது 'போலியான முறை'யில் மத்திய அரசில் ஏன் சுகாதார அமைச்சர்? கல்வி அமைச்சர்?

"அப்படி அவர்கள் நியமிக்கப்படுவதால், 'நாம் ஏதாவது செய்ய வேண்டும்' என்ற மனித சுபாவத்தால்—அவர்கள் எதை எதையோ செய்கிறார்கள்!

"இராணுவ நிர்வாகத்தைக்கூட இன்னும் சீர்திருத்தினால் பணம் மிச்சமாகும். அந்தப் பணத்தை மாநிலங்களுக்குத் தரலாம். ஏனெனில், மிலிடரி காண்டிராக்டுகளில் அப்படிப்பட்ட தவறுகள் நடப்பதாக மன்றங்களிலேயே பேசப்படுகிறது.

"எங்களூரில்கூட ஒருவர் திடீரெனப் பணக்காரராகிவிட்டால், 'மிலிட்டரி காண்ட்ராக்டால்' என்பார்கள்; ஆகவே, அந்தத் துறையைக்கூட அவர்கள் கண்காணித்து மிச்சம் பிடிக்கலாம்."

"இராணுவச் செலவுக்கு இந்தியாவின் வருமானத்தையே ஒதுக்கினால்கூட, 'ஹைட்ரஜன்' குண்டு வைத்திருக்கும் சீனாவுக்கு நாம் பதில் சொல்ல முடியுமா? ஆனால், அணுகுண்டோடு நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்ற வலிமை மிகுந்த நண்பர்கள் உலகில் இருக்கவே செய்கிறார்கள்!

"அதுமட்டுமல்ல; அப்படியொரு போர் வருமானால், நாடே போர்க்களத்துக்குத் தயாராகும்! ஒவ்வொரு இளைஞனும் போர் வீரனாவான்! அப்போதுதான் உண்மையான ஒருமைப்பாடு வரும்! ஏதோ ஒரு காகிதத்தில் எழுதிப் படிக்கும் ஒருமைப்பாட்டு உறுதிமொழியால், ஒருமைப்பாடு வந்துவிடாது! இப்படிப்பட்ட சமயத்தில்தான் ஒற்றுமையைக் காணலாம்!

"அந்த ஒற்றுமை இருக்கும்போது சீனா உள்ளே எளிதாக நுழைந்துவிட முடியுமா? நகருக்கு நகர் சந்திப்போம்! தெருவுக்குத் தெரு சந்திப்போம்! வீட்டுக்கு வீடு எதிர்ப்போம்! ஆகவே இராணுவச் செலவுகளைக் குறைத்து, பசியால் வாடும் மக்களுக்கு உணவளிக்கும்படி நிதி தரலாம்!"

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்ற மேலவையில்)

புதுப்பாக்கம் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி துவக்கவிழா

சென்னை—புதுப்பாக்கம் பைகிராப்ட்ஸ் சாலை முதல் தெருவில், 30—6—67 மாலை 6-30 மணிக்கு மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளித் துவக்கவிழா நடைபெறும்; துணை மேயர் தா. கிருட்டினமூர்த்தி தலைமையிலும் முன்னாள் துணை மேயர் ஆர். சடகோபன் முன்னிலையிலும் திருமதி இராணி அண்ணாதுரை உயர்நிலைப்பள்ளியைத் துவக்கிவைப்பார்.

நில வரி நீக்கம்!

அரசு முடிவு

லக்னோ, சூன் 27—

"நில வரிகள் அனைத்தையும் நீக்குவதற்கு உத்தரப் பிரதேச மாநில அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று முதலமைச்சர் சரண் சிங், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

'பயன் இல்லாமல் செலவு இருக்கக்கூடாது'

சிக்கன நடவடிக்கை பற்றி அமைச்சர் விளக்கம்

சென்னை, சூன் 27—

"ஆட்குறைப்புச் செய்யப்படவில்லை; உடனடியாக ஆட்குறைப்புச் செய்யப் போவதும் இல்லை"

என்று செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து, சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மகளிர் நலத் துறையில் ஏறத்தாழ 1,000 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கூறி, கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை திருமதி இலட்சுமி கிருட்டினமூர்த்தி கொண்டுவந்தார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து பதிலளித்ததாவது:—

"கிராம சேவிகையரில் பலர் போதிய வேலை செய்வதில்லை; அவர்களால் ஆண்டுக்கு ரூ. 27 இலட்சம் அரசினரால் செலவழிக்கப்படுகிறது.

பயனில்லாமல் செலவு இருக்கக்கூடாது என்ற வகையில் சிக்கன நடவடிக்கை எடுக்க அரசு கருதியுள்ளது.

இந்தச் சிக்கன நடவடிக்கையினால் பாதிக்கப்படும் கிராம சேவிகையர், ஆசிரியைகளாகவோ, குடும்பக் கட்டுப்பாடு அலுவலர்களாகவோ மாற்று வேலையில் அமர்த்தப்படுவர்."

அமைச்சர்கள் மீது அரோரா!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரம் இந்தப் பிரச்சினை மீண்டும் கிளம்பலாம்.

★

திட்டங்களைப் பற்றி விளக்குவதற்காக, 'யோஜனா' என்ற பெரில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இரு பத்திரிகைகள் மாதமிருமுறை வெளியாகின்றன,

1966–67-ல் அதன் வரவு–செலவு விவரங்களைப் பார்த்தால் நட்டக் கணக்கு பயங்கரமாக இருக்கிறது!

சென்ற ஆண்டு அந்த இரு பத்திரிகைகட்கும் ஆன செலவு ரூ. 4,41,850; விற்பனை வரவு 79,180; ஏற்பட்ட நட்டம் 3,62,670.

"திட்டங்களைப் போடுவதில் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறீர்கள்; அதற்கு ஈடான பலன் கிடைக்கவில்லையே?" என்று மத்திய அரசாங்கத் திட்டத்தின் மீது குற்றச்சாட்டுகள் வந்தன. திட்டங்களுக்கு ஏற்பட்ட கதி, திட்டங்களைப் பற்றி விளக்க வந்த ஏட்டுக்கும் ஏற்பட்டுவிட்டது போலும்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.